## இந்து வேத முன்னேற்ற கழகம்

**இ.மு.க.** **I.M.K.**



**மெய்ஞ்ஞானக் கொடி**

**அந்தணர் அண்ணல்**
**ஞானச்சாரியார்**

அழைக்கிறார் ! அழைக்கிறார் !!
இந்து வேதம் தழைக்க
இந்து மதம் பிழைக்க
உழைக்க அழைக்கிறார் !

முதல் பாகம்

# இந்து மத தற்கொலை ஏன்?!

பதினெண் சித்தர் மடம்
சென்னை – 53.

ரூ 13.00

காணிக்கை ரூ. [illegible] வெளியீடு எண் : 0888

வெளியிட்டோர் :



இந்து வேதம் பரப்பும் நாயகம்

சித்தர் எண் வகையார்

சித்தர் வேதகண நாதர்

## இந்து வேதம் பரப்பும் நாயகம்

## பதிப்பகம்

(INDU VEDHA CULTURAL CENTRE)

46/2 பழைய கீழ் மதுரை ஸ்டேசன் ரோடு
மதுரை - 625 009.
தொலைபேசி : 621046

உரிமை வெளியீடு :- **பதினெண்சித்தர் மடம்,**
**காரனோடை,** சென்னை-67.

ஓம்

# அந்தணர் அண்ணல்

# ஞானுச்சாரியார்



**அண்ட பேரண்ட அருட்பேரரசர்**
**அருளாட்சி நாயகம்**

**தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய**

**பதினோராவது பதினெண் சித்தர்**

**பீடாதிபதி**

**ஞாலகுரு சித்தர் காவிரியாற்றங்கரை**

**கருவூரார்.**

அந்தணர் அண்ணல்

# ஞானாச்சாரியார்



இந்து மத தந்தை

இந்து வேத நாயகம்

இந்து மத தலைமை ஆச்சாரிய குருபீடம்

பன்னிரெண்டாவது பதினெண் சித்தர்

பீடாதிபதி

ஞானகுரு சித்தர் அரசயோகி கருவூரார்.

# பதிப்புரை

பதினெண் சித்தர் மடத்தின் வெளியீடாக வெளிவருகிறது ''இந்து மதத் தற்கொலை ஏன்? என்ற இச்சிறு புத்தகம் இதை. பதினெண் சித்தர் மடத்திற்காக இந்து வேதம் பரப்பும் நாயகம் பதிப்பகம் அச்சிடுகின்றது.

சுமார் அரை நூற்றாண்டு காலமாக, ஆதிசிவனாரால் தோற்றுவிக்கப்பட்ட பதினெண் சித்தர் மடத்தின் மடாதிபதி, இந்து வேத நாயகம், இந்து மதத்தந்தை, இந்துவேத இந்து மத தலைமை ஆச்சாரிய குருபீடம், ஞாலகுரு, குருமகா சன்னி-தானம், அந்தணர் அண்ணல் ஞானாச்சாரியார் அவர்கள்; திரு, மடத்து அருட்பணிகளிலும், கருகுலம், குருகுலம், தருகுலம், திருகுலம், இந்து வேதாகம பாடசாலை முதலியவற்றின் நிர்வாகப் பணிகளிலும் மட்டுமே பெரும்பாலும் ஈடுபட்டுக் கொண்டிருந்தார்.

இந்த எல்லையைக், கடந்து ''பதினெண் சித்தர் மடம், நாடு முழுவதும் சென்று இந்துவேத இந்துமத கருத்துக் களையும், மனு நீதியின் செய்திகளையும் இந்துக் களுக்கு எடுத்துக்கூற வேண்டும்'' என்று இந்துமதப் பெரியவர்கள் அனைவரும் தொடர்ந்து வேண்டிக் கேட்டுக் கொண்டதின் பேரில்; பதினெண் சித்தர் மடத்து குருபீடம் சிறிது காலமாக பொதுமக்களைச் சந்தித்து அருளாசியும் அருளுரையும் வழங்கிட ஆரம்பித்திருக்கிறது.

இம்முயற்சியின் பயனாக, 'இந்து சமய மாநாடு' என்ற ஒன்றை தொடர்ந்து 10 நாட்கள் நடத்தக்கூடிய ஒரே ஓர் இடமான கன்னியாகுமரி மாவட்டத்தில், ஆத்தாள் தேவி மண்டைக்காடு பகவதியம்மன் திருவிழாவில், ஐந்தவா சேவா சங்கத்தின் அழைப்பின் பேரில் கலந்து கொண்டது பதினெண் சித்தர் மடத்து குருபீடம், ஆனால் சற்றும் எதிர்பாராத விதமாக கணிசமான இந்துக்களால் குரு பீடத்தின் திருப்பணிகளுக்கு இடையூறுகள் பல ஏற்-பட்டுவிட்டன. எனவே, பதினெண் சித்தர் மடத்தை சேர்ந்த அனைவரும், மற்ற இந்து மத பற்றாளர்களும், பத்தியாளர்களும்

பதினெண் சித்தர் மடத்திலிருந்து மேற்படி இடையூறுகளுக்கு உரிய விளக்கம் அருளப்பட்டே ஆகவேண்டும் என்று குருபீடத்திடம் வேண்டிக் கேட்டுக் கொண்டார்கள். அதன் பயனாக **"இந்துமத தற்கொலை ஏன் என்று இச்சிறு நூல் வெளியிடப்படுகிறது''.**

— அருள்மிகு சமயக்குறவர் நால்வர் திருத்தோன்றல்.
இந்து வேதம் பரப்பும் நாயகம்
தவத்திரு த. கேசவன் பி.காம்.,
266, கீழவெளி வீதி, நெல்பேட்டை,
மதுரை–1. தொலைபேசி ; 621046

**நன்றியுரை**

மதுரை இந்து நாடார் மகாசன சங்கத் தலைவராக இருந்து, இந்து வேதத்திற்கும் இந்து மதத்திற்கும், இந்துக்களுக்கும் அருந்தொண்டாற்றிய திரு. ப. ரா. முத்துச்சாமி நாடார் அவர்களின் பேரன் என்ற முறையில், இச்சிறுநூலை வெளியிடுவதற்குரிய வாய்ப்புக் கிடைத்தமையை எண்ணி, பெரிதும் மகிழ்கிறேன். இந்நூல் வெளியீட்டிற்கு பேருதவி புரிந்த நாடார் சமூகப் பெரியோர்கள், சான்றோர்கள், ஆன்றோர்கள், அனைவருக்கும் எனது பணிவான வணக்கங்களை தெரிவித்துக்கொள்கிறேன்.

"ஓம் திருச்சிற்றம்பலம் ஓம்"

இப்படிக்கு,
திருவருட்செல்வர் தனபால நாடார் மகன் த. கேசவன் பி.காம்

1. M.K.K. சண்முக நாடார் பேரன் S. பழனிவேல்
2. சி. அருணாசல நாடார் பேரன் அ.த. வெங்கடேசு பிரபு
3. அ. அருணாசல நாடார் பேரன் செ. நாகசங்கர்
4. மா.ப. சுப்பையா நாடார் பேரன் பா. குணசேகரன்
5. அ.ப. தில்லைச் சிதம்பர நாடார் பேரன் மா. திவாகர்
6. வீ. வடிவேல் நாடார் பேரன் அ.த. முருகேசன்
7. செயராசு நாடார் மகன் செ. மாரிக்கனி
8. ப.ரா. பலவேச நாடார் பேரன் ரா. விவேகானந்தன்



# வாழ்த்துச் செய்தி

இந்நூலின் வாயிலாக,

1 ஐந்தவா சேவா சங்கத்தின் இந்து சமய மாநாட்டில், பதினெண் சித்தர் மடாதிபதி, இந்துமதத் தந்தை, அந்தணர் அண்ணல், ஞானாச்சாரியார், அருளுரை ஆற்றியே தீரவேண்டும்; என்று உறுதியெடுத்து அதற்காக வரிந்து கட்டிக் கொண்டு தொடர்ந்து பலரிடம் போராடி அரும்பாடுபட்ட, குளச்சல் திரு. நடராசன் அவர்களுக்கும், அதற்கு உறுதுணையாக இருந்த அவரது நண்பர்கள் இ. ராதாகிருட்டிணன், இராசா (பெரியசாமி), சனார்த்தனன், குமரேசன், பச்சைமால் இராசேந்திரன், முருகன், ஐயப்பன், அசோகன், சுரேஷ். சுரேந்தர் ...முதலியோருக்கும் பதினெண் சித்தர் மடம் வாழ்த்துக்கள் தெரிவித்து பாராட்டுகிறது.

2 குவலய குருபீடத்தையும், அவருடன் வந்த சித்தர்கள் திருக்கூட்டத்தையும் வரவேற்று; உணவும், உறைவிடமும் தந்தருளிய திரு தங்கசாமி நாடார் அவர்களையும் திரு விட்டுணுதாசு அவர்களையும், அவர்கள் தம் குடும்பத்தாரையும் பதினெண் சித்தர் மடம் வாழ்த்தியருளுகிறது.

3 பதினெண் சித்தர் மடாதிபதி, அந்தணர் அண்ணல் ஞானாச்சாரியார் அவர்கள் கன்னியாகுமரி மாவட்டம் எழுந்தருளுவதற்கு மூலகாரணமாக இருந்திட்ட யோகிமகராஜ் ராம்சுரத்குமார் அவர்களின் அருள்நெறித் திருக்கட்டத்தை தலைமை தாங்கி முன்னின்று நடத்துகின்ற திருவருட்செல்வர், விவேகானந்தர் பேரவை இயக்க செயலாளர், வழக்கறிஞர் திரு டி பாவகிருட்டிணன் அவர்களுக்கும், திருவருட்செல்வர் வழக்கறிஞர் திரு. சிவதாணு அவர்களுக்கும், பதினெண் சித்தர்மடம் பாராட்டுதல்களையும் அறிவித்துக் கொள்கிறது.

4 இதே போல், பதினெண் சித்தர் மடத்தின் சித்தர்களையும், ஆச்சாரியார்களையும், சன்னிதானங்களையும், தம்பிரான்களையும் ஆதீனங்களையும் கன்னியாகுமரி மாவட்ட முழுவதும் அழைத்துச் சென்று அறிமுகப்படுத்திட்ட பெரியவர், தவசி, ஞானி, மகர்ன், சாது, துறவி பத்தன்காடு கனகசபை அடி–

களார் அவர்களின் சேவையை, பெரிய துணையை பதினெண் சித்தர் மடம் பாராட்டி வாழ்த்துதலை தெரிவிக்கிறது.

5. **"இந்துவேதாகம கருத்துக்களும், செய்திகளும் வழிபாட்டு நெறிமுறைகளும், ஒழுகலாறுகளும் ...... கல்வி கற்கின்ற மாணவர்களுக்கிடையில் நல்ல ஒழுக்கத்தையும், கட்டுப் பாட்டையும் அடக்கத்தையும், உருவாக்கித்தரும்"**- என்ற பதினெண் சித்தர் மடத்தின் கொள்கையை கன்னியாகுமரி மாவட்டத்தில் செயலாக்கிடுவதற்கு ஞானகுரு, குருமகா சன்னிதானம், அந்தணர் அண்ணல், ஞானாச்சாரியார் அவர்களுக்கு உரிய வாய்ப்பை வழங்கிட்ட விவேகானந்தா கல்லூரி தாளாளர் திருவருட்செல்வர், **பெரியவர் திரு. குமாரசாமி அவர்களுக்கும்;** சிவந்தி ஆதித்தனார் கல்லூரி (நாகர்கோயில்) தாளாளர் திருவருட்செல்வர் **உயர்திரு. இராசகோபாலன்** வழக்கறிஞர் அவர்களுக்கும் பதினெண் சித்தர் மடம் தமது பாராட்டுதல்களையும், வாழ்த்துதல்களையும் தெரிவித்துக் கொள்கிறது.

'ஓம் திருச்சிற்றம்பலம் ஓம்'





# இந்துமத தற்கொலை ஏன்?

பெறுநர் :

மாவீரர்
உயர்திரு. டி. நடராசன்
3/50 ஏ நாராயணா நகர்
குளச்சல் - 629 251.

இந்துமத விடுதலை வீரர்களில் ஒருவரரான மாவீரர் டி. நடராசன் அவர்கள் சமூகத்திற்கு, இந்துவேத இந்துமத தலைமை ஆச்சாரிய குருபீடம் குருமகா சன்னிதானம், ஞாலகுரு அந்தணர் அண்ணல், ஞானாச்சாரியார் அவர்கள் வாழ்த்தியருளிய வாக்கின் சாரமாக, சுருக்கமாக இத்திருவோலை அனுப்பப்படுகிறது.

வீர இளைஞரே ! அஞ்சா நெஞ்சமும் சிந்தை வலிமையும் செயல் மறமும், கடல்போன்று சிறந்த தன்னம்பிக்கையும், சுறுசுறுப்பும் உடைய நடராசனே ! பதினெண்சித்தர் மடாதிபதி இந்துவேத நாயகம், இந்து மதத்தந்தை, அந்தணர் அண்ணல் ஞானாச்சாரியார் அவர்கள் ; தாம் முழக்கி வரும் **இந்துவேத விடுதலை முழக்கத்தின் மூலம்,**

**அ) இத்துக்களை இந்துக்களாக வாழச் செய்யவும்**

**ஆ) இந்துக்களின் மதமாற்றத்தைத் தடுக்கவும்,**

**இ) மதமாற்றம் செய்து கொண்ட மக்களை மீண்டும் இந்துக்களாக மாற்றவும் ;**

**நிறைவான செயல்திட்டங்களை உருவாக்கியிருக்கின்றார்கள்.** இச் செயல் திட்டங்களை தங்களின் மூலம் கன்னியாகுமரி மாவட்டத்தில் செயலாக்கிட தங்களை தேர்ந்தெடுத்திருக்கின்றார்கள்.

2. அன்பு மகனே ! நீ இளைஞன் என்பதால், மிகுந்த துடிதுடிப்போடும், படபடப்போடும் செயலாற்ற விரும்புகிறாய் ஆனால், முக்காலத்தையும் உணர்ந்துநிதானத்தோடும், பொறுமை

யோடும், பொறுப்போடும், முன்னெச்சரிக்கையோடும், யார் மனதையும் புண்படுத்தக் கூடாது என்ற கொள்கையோடும் குறிக்கோளோடும் செயல்படப்புறப்பட்டிருக்கும் அ) இந்து வேத விடுதலை வீரர் (The Liberator) ; ஆ) இந்துக்கள் அனைத்து வகையான இருள்களிலிருந்தும், இன்னல் களிலிருந்தும் காப்பாற்றப்புறப்பட்டிருக்கும் ஞான வள்ளல் (The Saviour) ; அருளை அனுபவப் பொருளாக மருந்தாகவும், விருந்தாகவும் வழங்கி அவனவரின் துன்பங்களையும் அகற்றும் பரபிறமம் (The Redeemer) அந்தணர் அண்ணல், ஞானாச்சாரியார், உன்னைப்போல் துடிதுடிப்போடும், படபடப்போடும், விறுவிறுப்போடும், வேகத்தோடும், செயல்பட இயலாது. ஏனென்றால், ஞானாச்சாரியார் பல்வேறு வகையான சிக்கல்களும், இயலாமைகளும் நிறைந்த வாழ்வியல் நடைமுறைகளுக்கு இடையில் இருந்து வருகிறார். இதை உன் போன்ற ஒரு சிலராவது புரிந்துக்கொண்டே ஆக வேண்டும்.

3. எனவேதான், உன்னுடைய தேதியிடாத அஞ்சலில் (அஞ்சல் உறையில் குளச்சல் அஞ்சலகமுத்திரையில் 20-3-95 என்றுள்ளது), ''மனதில் ஒரு சிறிய குறை என்னவென்றால். 12-3-95 தேதியும் ஐயா மண்டைக்காட்டில் பேருரை நிகழ்த்தியிருந்தால், மக்கள் ஐயம் தீர்ந்து பெரும்பேறு பெற்றிருப்பார்கள். என மனதார நம்புகிறேன். ...'' என்ற வாசகம் எழுதப்பட்டிருப்பதைக் கண்டுதான் ; அவசர அவசியமாக இந்த் நெடிய அஞ்சல் எழுதப்படுகிறது.

இந்த அஞ்சலை,

அ) உனக்கு நம்பிக்கைக்குரியவர்கள், ஆ) உண்மையான இந்துக்கள்,

இ) உண்மையிலேயே இந்து மதத்தை பாதுகாக்க விரும்புகிறவர்கள்,

ஈ) உண்மையிலேயே இந்துக்களுக்கு தொண்டு செய்ய நினைப்பவாகள்,



உ) உண்மையிலேயே கடவுள் பத்தி உள்ளவர்கள்,

ஊ) உண்மையிலேயே இந்து மத ஒற்றுமையும், ஒருமைப் பாட்டையும், உருவாக்க விரும்புகிறவர்கள்; ... என்று உனக்கு தெரிந்தவர்களுக்கெல்லாம்; படித்துக் காட்டிடு. இதன்மூலம், விழிச்சியை, எழிச்சியை பெறக்கூடியவர்களை முழு முகவரிகளோடு இந்துவேத இந்து-மத தலைமை ஆச்சாரிய குருபீடத்திற்கு தெரிவித்திடு, அதுபோதும், உன்னுடைய தலைமையில் அவர்களுக்கு ஒரு குறிப்பிட்ட காலம் ''இந்துவேத, இந்துமத கருத்துப்பரிமாற்றக் கருத்தரங்கு'' நடத்திட பதினெண் சித்தர் மடம் ஏற்பாடு செய்யும் அதன் அடிப்படையில் உன்னுடைய துணையோடு, உன்னுடைய துணையோடு, உன்னுடைய துணையோடு, கன்னியாகுமரி மாவட்டம் முழுவதும் பல கருத்துப்பரிமாற்றக் கருத்தரங்குகள் ... நிகழ்த்திடத் தயாராக இருக்கிறது பதினெண் சித்தர் மடம்,

சிந்தித்திடு ! செயல்பட தயாாரகிடு !

4. அன்பு மகனே ! பதினெண் சித்தர் மடாதிபதி, ஆதி சிவனாரின் வாரிசு, கருகுல ஆதீனம், கருமூலப்பண்டாரம், அநாதியாதி கடந்த தம்பிரான் அடிகளார் அனுப்பிய பதிணெண் சித்தர் மடத்து சித்தர்கள் கன்னியாகுமரி மாவட்டத்தில் செயல்பட்டதையும், மண்டைக்காடு பகவதியம்மன் கோயில் வளாகத்தில் ஐந்தவா சேவா சங்கத்திற்குரிய இடத்தில் பொதுச் செயலாளர் இராசரத்தினம், பி.ஏ.,பி.எல்., அவர்களின் திருக்கரத்தால் இந்துவேத இந்துமத விடுதலைப்பணியின் துவக்கமாக இந்துமதத்திற்கே உரிய மெய்ஞ்ஞானக் கொடி ஏற்றப் பட்டதையும் பற்றிய செய்திகள் ; கன்னியாகுமரி மாவட்ட (பத்திரிக்கை) செய்தித்தாள்களில் வெளிவந்தன ...... ஆனால்,
1. ஐந்தவா சேவா சங்கம் முறைப்படி ஒப்புதல் வழங்கி நூற்றுக்கணக்காக வண்ணச் சுவரொட்டிகள் (Wall Posters) அச்சிட்டு விளம்பரம் செய்தும், கன்னியாகுமரி மாவட்டத்தின் பொதுமக்கள் தாங்களே, ஞானாச்சாரியாரின் இந்துவேத விடுதலை முழக்கம் பற்றி பல இடங்களில் சுவர்களில் அறிவிப்புக்கள் எழுதி நிறைவான விளம்பரம் செய்தும் ; ஞானாச்சாரியார், பதினெண் சித்தர் மடத்து சித்தர்கள் பலரை தம்

மோடு அழைத்துக்கொண்டு, ஆத்தாள் தேவி பகவதியம்மன் கோயிலுக்கு நேரில் வந்து, வழிபாடுகள் நிகழ்த்தியது பற்றியும் 2. ஐந்தவா சேவா சங்கம் நிகழ்த்திய இந்து சமய மாநாட்டில் அருளுரை ஆற்றியது பற்றியும் எந்த ஒரு செய்திக் குறிப்புகூட எந்தச் செய்தித்தாள்களிலும் வெளிவரவில்லை.

5. அதாவது, அன்பு மகனே! ஐந்தவா சேவா சங்கத்தின் ப்புதலையும் பொதுமக்களின் அளப்பறிய ஆர்வத்தையும் ஒருங்கே, பற்றுத்தான் அந்தணர் அண்ணல், ஞானாச்சாரியார் அவர்கள் ஆத்தாள் தேவி மண்டைக்காடு பகவதியம்மன் திருவிழாவில் நடந்த இந்து சமய மாநாட்டில், அனைவரின் எதிர்பார்ப்புக் களுக்கும் ஏற்ப அருளுரை ஆற்றினார். இந்த அருளுரையில் ஐந்தவா சேவா சங்கம் தோன்றி 64 (அறுபத்து நான்கு ஆண்டு. கள் ஆகியும் 'ஐந்தவா என்ற சொல்லுக்கு யாருமே கூறாத உண்மையான பொருள் விளக்கத்தை இந்து வேதத்திலிருந்து மிகச்சிறந்த சான்றுகளோடும் ஊன்றுகளோடும் எல்லோர் மனதிலும் பதியும் வண்ணம் ஆண்கள் பெண்கள்... என்று அனைவரையுமே ஈர்க்கும் வண்ணம் எளிமையாகவும், தெளிவாகவும் விளக்கியுரைத்து அருளுரையாற்றினார்.

இந்த அருளுரையின் சிறப்பே, அருட்கொடை வள்ளல், ஞானவேந்தர், ஞானச்சாரியார் அவர்கள், கூடியிருந்த பல்லா-யிரக்கணக்கான மக்களையும் சுமார் 1½ மணி நேரம் எவ்வித அசைவும் இல்லாமல் பதுமையாக, கற்சிலையாக அமர்ந்து கேட்டுமாறு செய்திட்டார் என்பதுதான்,

6. அதாவது அந்தணர் அண்ணல் ஞானாச்சாரியார் அவர்கள், ''தாம் இந்து வேதாகம கருத்துக்களையும், இந்துமத கருத்துக்களையும் மனுநீதி நூல்களின் துணையோடு பொது மக்கள் அனைவரும் ஆர்வத் தோடு சுவை குன்றாமல் கேட்டுப் புரிந்து மகிழுமாறு செய்யக்கூடிய மிகச்சிறந்த போதனையாளர் சாதனை யாளர்'' என்ற பேருண்மையை; இந்தியா முழுவதுமிருந்து வந்திருந்த இந்துமத கட்சியினர்களுக்கும், இந்துமத அரசியல்



கட்சியினர்களுக்கும், சமுதாயக் கட்சியினர்களுக்கும், இலக்கிய கட்சியினர்களுக்கும், பேரார்வத்தோடு இந்துமத கருத்துரை கேட்க வந்திருந்த பொதுமக்களுக்கும் புரிய வைத்திட்டார்.

7. இம்மாபெரும் சாதனையை இந்தியா முழுவதுமுள்ள இந்துக்கள் தெரிந்துகொள்ளும்படி செய்ய வேண்டிய பொறுப்பு. கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள அனைத்து (பத்திரிக்கை களுக்கும்) செய்தித்தாள்களுக்கும், வார இதழ்களுக்கும் மாதம் மலர்களுக்கும் உண்டு. ஆனால் என்ன நிகழ்ந்தது என்பது உனக்குப் புரியும்!!!...

கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள பத்திரிக்கைகள் எதுவுமே,

1. ஞானாச்சாரியார்
2. பதினெண் சித்தர் மடம்
3. இந்துவேத விடுதலை முழக்கம்
4. சித்தர்கள்
5. 'ஐந்தவா' என்ற சொல்லுக்கு தரப்பட்ட பொருள் விளக்கமான

அ) ஐந்தவித்தவா — ஆ) ஐந்தவத்தவா
இ) ஐந்தணைத்தவா — ஈ) ஐந்திணைத்தவா
உ) ஐந்துணைத்தவா — ஊ) ஐந்நிலத்தவா
எ) ஐங்கணத்தவா — ஏ) ஐந்தாதாரத்தவா
ஐ) ஐம்புலத்தவா — ஒ) ஐந்துறைத்தவா
ஓ) ஐம்பூதத்தவா — ஔ) ஐந்தலைத்தவா
ஃ) ஐந்தலை நாகத்தவா'

ஐந்தளைத்தவா......என்ற சொற்களில் ஒரு சொல்லைக்கூட வெளியிடவில்லை, வெளியிடவில்லை, வெளியிடவேயில்லை.

8) ஆனால், குறிப்பிட்ட கன்னியாகுமரி மாவட்ட பத்திரிக்கைகள் எல்லாம் மண்டைக்காடு பகவதியம்மன் பற்றி, சிறப்பு மலர் வெளியிட்டன. இம்மலரில், ஓரிடத்தில் கூட அ) இந்து சமய மாநாட்டில் அருளுரை ஆற்றிய பதினெண் சித்தர் மடாதிபதி பற்றியோ, ஆ) அவர் வெளியிட்ட ஐந்தவா

சேவா சங்கம் பற்றிய பொருள் விளக்கம் பற்றியோ இ) ஆத்தாள் தேவி மண்டைக்காடு பகவதியம்மனுக்கு காயந்திரி மந்தர, மந்திர, மந்திற, புத்தகம் வெளியிடப்பட்டதுபற்றியோ; ஈ) இந்த அம்மனின் தூரன்உக (துவாபரயுக), கலியன் உக (கலியுக) வரலாற்று செய்திகள் பற்றியோ, உ) பகவதியம்மனுக்கு ஒரு வரலாற்று புத்தகமே வெளியிட இருப்பது பற்றியோ, ஊ) இந்துக்கள் ஏன் ஒற்றுமையாக இல்லை? என்பது பற்றி வழங்கிட்ட விளக்கங்கள் பற்றியோ எ) இந்துமதத்தின் பெயரால் உள்ள அரசியல் கட்சிகளும், சமுதாயக்கட்சிகளும், மதக்கட்சிகளும் இவற்றை சேர்ந்த தலைவர்களும், தொண்டர்களும் ஒருவருக்கொருவர் சவால் விட்டு சண்டை போட்டுக் கொண்டிருப்பது பற்றி வருத்தம் தெரிவித்தது பற்றியோ, ஏ) இந்து வேதத்தை பரப்ப இந்து மதத்தை வளப்படுத்த இந்துக்களை பாதுகாத்திட, இந்தியாவின் ஒற்றுமையை வலிமைப்படுத்திட கூறப்பட்ட வழிவகைகளைப் பற்றியோ, செயல் திட்டங்களைப் பற்றியோ... ஒரு வரி கூட எழுதவில்லை: ஒரு குறிப்பு கூடக் குறிக்கப்படவில்லை; எந்த செய்தியும் வெளியிடப்படவில்லை.

9) அன்பு மகனே!, "இந்து மத நாடான இந்தியாவின் ஒரு பகுதியாக இருக்கின்ற கன்னியாகுமரி மாவட்டத்தில்; இந்து மதத்தின் பெயரால் பல அரசியல் கட்சிகளும், சமயக்கட்சிகளும் சமுதாயக் கட்சிகளும், இந்துமத சங்கங்களும், வழிபாட்டு மன்றங்களும், இந்துமத பத்தியாளர்களும், இந்துமதத்திற்காக உயிரையே கொடுக்க தயாராக இருக்கின்ற பலநூறு தலைவர்களும், பல்லாயிரக்கணக்கான தொண்டர்களும் 'இருக்கின்ற கன்னியாகுமரி மாவட்டத்தில், இந்தியாவிலேயே 'இந்து சமய மாநாடு' என்ற ஒன்றை துணிச்சலாக தொடர்ந்து ஆண்டுதோறும் 10 நாட்கள் நடத்துகின்ற ஐந்தவா சேவா சங்கம் உள்ள கன்னியாகுமரி மாவட்டத்தில்; உலகப் புகழ்பெற்ற ஆத்தாள் தேவி மண்டைக்காடு பகவதியம்மன் திருவிழாவில்; படித்தவர்களையும், இந்து மதத்தில் எல்லையற்ற ஈடுபாடு கொண்டவர்களையும் மிகுதியாக கொண்ட ஐந்தவா சேவா சங்கத்தினர் நடத்திய இந்து சமய மாநாட்டில்; இந்துமதத்திற்காகவே வாழ்ந்து கொண்டிருக்கக்கூடிய இந்துவேத இந்து மத தலைமை ஆச்சாரிய குருபீடம், ஆதிசிவனாரின் குருபாரம்பரிய



வாரிசு, அந்தணர் அண்ணல் ஞானாச்சாரியார் அவர்கள் அருளாசி வழங்கி, அருளுரை ஆற்றி, இந்துவேத இந்துமத வரலாற்று பேருண்மைகளையும், தத்துவப் பேருண்மைகளையும், விளக்கியுரைத்து 'இந்துவேத விடுதலை முழக்கத்தை' முழக்கினார்' -என்ற செய்தி எல்லா பத்திரிக்கைகளாலும், இருட்டடிப்பு செய்யப்பட்டுவிட்டது, இருட்டடிப்பு செய்யப்பட்டு விட்டது, இருட்டடிப்பு செய்யப்பட்டுவிட்டது.

1. இப்படி இருட்டடிப்புச் செய்யப்பட்டது ஏன்? ஏன்? ஏன்?
2. இப்படி இருட்டடிப்புச் செய்யப்பட்டது எதற்காக? எதற்காக? எதற்காக?
3 இப்படி இருட்டடிப்புச் செய்யப்பட்டது யாரால்? யாரால், யாரால்? - என்று வினாவெழுப்பி சிந்தித்து பார்த்திடு; செயல்பட்டிடு.

அப்பொழுது தான், உனக்கு ஒரு சில பயங்கரமான அச்சம் மிகுந்த வியக்கத்தக்க, ஆச்சரியமிக்க, எளிதில் நம்பமுடியாத ஒப்புக்கொள்ளமுடியாத ஒரு சில பேருண்மைகள் புரிந்திடும்.

10) அதாவது, அதாவது, அதாவது, அன்பு மகனே!

1) "இந்துக்களுக்கு எதிரிகள் இந்துக்களுக்கு இடையே தான் இருந்தார்கள், இருக்கிறார்கள்"
2) "இந்துக்களுக்கு பகைவர்கள் இந்துக்களுக்கு இடையே தான் இருந்தார்கள், இருக்கிறார்கள்,"
3) "இந்துக்களின் ஒற்றுமையைக் கெடுப்பவர்கள் இந்துக்களுக்கிடையே தான் இருந்தார்கள் இருக்கிறார்கள்,"
4) "இந்துக்களுக்கு அழிவையும், இழிவையும், சிதைவையும், சீரழிவையும், பழியையும், பிரிவினையையும், வேற்றுமையையும், நலிவையும் ... தேடித்தரக்கூடிய துரோகிகள், சதிகாரர்கள், சூழ்ச்சிக்காரர்கள், மாற்றுமதக் கைக்கூலிகள், கங்காணிகள், போலிகள் ... முதலியவர்கள் அனைவரும் இந்துக்களுக்கு இடையே தான் இருந்தார்கள், இருக்கிறார்கள்; இந்துக்களுக்கிடையே தான்

இருந்தார்கள், இருக்கிறார்கள்; இந்துக்களுக்கிடையே தான் இருந்தார்கள், இருக்கிறார்கள்."

5) "இந்து மதத்தின் பெயரால், பணமும், பதவியும், பட்டமும் புகழும் தேடுகின்ற சந்தர்ப்பவாதிகள் இந்துக்களுக்கிடையே தான் இருந்தார்கள், இருக்கிறார்கள்."

6) "இந்துக்கள் மதம் மாறுவதற்கு காரணமானவர்கள் இந்துக்களுக்கிடையே தான் இருந்தார்கள் இருக்கிறார்கள்"

7) "இந்துக்கள், இந்து மதத்தின் மெய்யான வரலாற்றை தெரிந்துக்கொள்ள முடியாமல் தடுத்துக்கெடுப்பவர்கள் இந்துக்களுக்கிடையே தான் இருந்தார்கள், இருக்கிறார்கள்".

8) "இந்துக்கள், இந்துவேதத்தின் கருத்துக்களையும் செய்திகளையும், அன்றாட வாழ்வியலுக்குரிய போதனைகளையும் தெரிந்து புரிந்து பயன்படுத்திட முடியாதபடி தடுத்துக் கெடுப்பவர்கள் இந்துக்களுக்கிடையே தான்இருந்தார்கள், இருக்கிறார்கள்"

9) "இந்துக்கள், இந்து மத அருளாளர்களின், பத்தியாளர்களின், சத்தியாளர்களின், சித்தியாளர்களின், முத்தியாளர்களின் வாழ்க்கை வரலாற்று சாதனைகளையும், போதனைகளையும் தெரிந்து, புரிந்து, போற்றி பரப்பி பயன் படுத்திட முடியாதபடி தடுத்துக் கெடுப்பவர்கள் இந்துக்களுக்கிடையே தான் இருந்தார்கள், இருக்கிறார்கள்"

10) "இந்துக்கள், இந்துமத புராணங்கள், இதிகாசங்கள், கதைகள், காதைகள், கவிதைகள், கீதைகள், கீறந்தங்கள்... முதலியவைகளை அக்கறையோடும், ஆர்வத்தோடும், ஆழ்ந்து படித்துப் புரிந்து பயன்படுத்தி, நன்மையடைய முடியாதபடி தடுத்துக் கெடுப்பவர்கள் இந்துக்களுக்கிடையேதான் இருந்தார்கள், இருக்கிறார்கள்."



11) "இந்துக்கள் இந்துவேத பூசை மொழியிலுள்ள சத்தி, சித்தி, முத்திகளைத் தரக்கூடிய காயந்திரி மந்தர மந்திர மந்திறங்களை செவித்தோ!, உருவேற்றியோ!, ஓதியோ! தோசமிட்டோ! பாராயணம் செய்தோ!, அத்தியாயணம் செய்தோ நன்மையடைய முடியாதபடி தடுத்துக் கெடுப்பவர்கள் இந்துக்களுககிடையேதான் இருந்தார்கள், இருக்கிறார்கள்"

12) "இந்துக்கள், இந்துமத பூசை விதிகளின்படி முத்தீ ஓம்பல், ஐந்தீ வேட்டல், ஓகாசனம், யோகாசனம், மோகாசனம், போகாசனம் முதலியவைகளை பயின்று நன்மைகள் அடைவதை தடுத்துக்கெடுப்பவர்கள் இந்துக்களுக்கிடையே தான் இருந்தார்கள், இருக்கிறார்கள்".

13) "இந்துக்கள், இந்துமத பூசை விதிகளின்படி தவம் குண்டலினி, குண்டளினி, குண்டழினி முதலியவைகளை நோற்று எல்லாவகையான நன்மைகளையும் பெறுவதை தடுத்துக் கெடுப்பவர்கள் இந்துக்களுக்கிடையேதான் இருந்தார்கள், இருக்கிறார்கள்."

14) "இந்துக்கள், தங்கள் தங்களுடைய நாள், கோள், மீன் இராசி, முதலியவைகளால் ஏற்படக்கூடிய பாதிப்புக்களிலிருந்தும், அ) செவ்வாய் தோசம், ஆ) சனிதோசம் இ) நாகதோசம் ஈ) மூலநட்சத்திர தோசம் உ) கழுத்தர தோசம் ஊ) கழுத்திர தோசம் எ) கழுத்திற தோசம் ஏ) களத்தர தோசம் ஐ) களத்திர தோசம் ஒ) களத்திற தோசம் முதலிய பாதிப்புக்களிலிருந்தும், எதிரிகளால் மந்திரவாதிகளின்மூலம் விளைவிக்கப்படக்கூடிய பாதிப்புக்களிலிருந்தும்; விடுபட்டு, தப்பித்து, பாதுகாப்பு பெறுவதற்குரிய கலச பூசையையும், திருவிளக்கு பூசையையும் இந்துவேதாகமங்களில் கூறியுள்ளபடி முறையாக செய்து, நல்வாழ்வு வாழ முடியாதபடி தடுத்துக்கெடுப்பவர்கள் இந்துக்களுக்கிடையே தான் இருந்தார்கள், இருக்கிறார்கள்".

15) "இந்துக்கள், அருளை அனுபவப் பொருளாக மருந்தாகவும், விருந்தாகவும் பெற்று உய்வடைதற்காகவே இந்து–வேதாகமங்களில் கூறப்பட்டுள்ள அ) பூசை நெறி ஆ) கும்பிடு

நெறி இ) வணங்குதல் நெறி ஈ) வேண்டுதல் நெறி ... முதலிய நெறிகளையும் ; அ) அழுகை முறை ஆ) தொழுகை முறை இ) எள்ளல் முறை ஈ) ஏசல் முறை உ) அரற்றுதல் முறை, ஊ) புலம்புதல் முறை எ) வருந்துதல் முறை ஏ) வேண்டல் முறை ஐ) பரவுதல் முறை ஒ) பாடுதல் முறை, ஓ) ஆடுதல் முறை ஔ) பாடுகிடத்தல் முறை... முதலிய முறைகளையும் நன்கு தெரிந்து, புரிந்து, விரும்பி, ஏற்று, நடைமுறைப்படுத்தி, எல்லாவகையான இன்பங்களையும், நலங்களையும், பாதுகாப்புக்களையும் பெற்று நல்வாழ்வு வாழ முடியாமல் தடுத்துக்கெடுப்பவர்கள் இந்துக்களுக்கிடையேதான் இருந்தார்கள், இருக்கிறார்கள்.''

16) ''இந்துக்கள், மனுநீதி 'நூல்கள்' பதினெட்டையும் இந்துவேத நூல்கள் முந்நூற்று தொண்ணூற்றுரையும், இந்துமத நூல்கள் முப்பத்தாரையும் ஓரளவாவது தெரிந்து, புரிந்து, மெய்யான இந்துவாக வாழ்வதற்குரிய வண்ணம் ஓர் இந்துவின் ஆறுகடமைகளான''

அ) ஆண்டுதோறும் ஒரு முறை ஒற்றை உருத்திராக்கம் கழுத்தில் அணிவதையும்,

ஆ) மாதமொரு முறை புதிய பூணூல் அணிவதையும்,

இ) அமாவாசையிலும், முழுநிலவு நாளிலும் புதிய காப்புக்கயிரோ, புதிய கங்கணமோ அணிவதையும்.

ஈ) வாரத்தில் ஒரு முறையாவது ஏதேனும் ஒரு கோயிலுக்கு சென்று கும்பிட்டு அருட்சினை செய்துக் கொள்வதையும்,

உ) அன்றாடம் காலை மாலை இருவேளையும் நெற்றியில் திருநீறோ, குங்குமமோ, சந்தனமோ, சாந்தோ திருமண்ணோ ... இட்டுக் கொள்வதையும் (பூசிக்கொள்வதையும்)

ஊ) அன்றாடம் காலே மாலே இரு வேளேயும் காயந்திரி, மந்திரங்கள் செவிப்பதையும், தடுத்துக் கெடுப்பவர்கள் இந்துக்களுக்கிடையே தான் இருந்தார்கள், இருக்கிறார்கள்''



17) ''இந்துக்கள், தங்களை இந்துக்கள் என்று உணர்ந்து மற்ற இந்துக்களோடு பற்றோடும், பாசத்தோடும் பழகி தோழமையையும், நட்பையும் வளர்த்து, சகோதரதத்துவ அடிப்படையில் ஒன்று திரண்டு அ) இந்துமத மறுமலர்ச்சிக்காகவும் ஆ) இந்து மத வள வளர்ச்சிக்காகவும், இ) இந்துமத வலிமை செழிச்சிக்காகவும், ஈ) இந்துக்களின் ஆட்சி மீட்சிக்காகவும், விழிச்சியுற்று, எழிச்சி பெற்று, உரிய பயிற்சிகளைக் கற்று, பெரிய முயற்சிகளை ஏற்றிடாமல் தடுத்துக்கெடுப்பவர்கள் இந்துக்களுக்கிடையே தான் இருந்தார்கள், இருக்கிறார்கள்.''

18) ''இந்துக்கள், இந்துக்கோயில்களை மதித்து, போற்றி பேணி; பாதுகாத்து; அன்றாடம் ஆறுகால பூசைகள் நிகழச்செய்து; எல்லா வகையான அருட்பயன்களையும் பாதுகாப்புக்களையும் பெற்று; முறையான நெறியான இந்துமத வாழ்வு வாழ முடியாமல் தடுத்துக்கெடுப்பவர்கள் இந்துக்களுக்கிடையே தான் இருந்தார்கள், இருக்கிறார்கள்.''

19) 'இந்துக் கோயில்களில் முறையான நிர்வாகங்கள் நடைபெற விடாமல் தடுத்தும் இந்துக் கோயில்களின் சொத்துக்களை பாழாக்கியும், அபகரித்தும், ஆக்கிரமித்தும், கொள்ளையிட்டும், சீரழிப்பவர்கள் இந்துக்களுக்கிடையில்தான் மிகுதியாக இருந்தார்கள், இருக்கிறார்கள்.''

20) ''இந்துக்கள், என்றைக்குமே, ஒன்று திரண்டு ஒற்றுமைப்பட்டு, சமாதானத்தையும், அமைதியையும், நிம்மதியையும், மகிழ்ச்சியையும் பெறமுடியாதபடி; இந்துக்களுக்கிடையிலும், இந்துக்களுக்கும் மற்ற மதத்தவர்களுக்கும் இடையிலும் அடிக்கடி சண்டை சச்சரவுகளையும், கலகங்களையும், மிகப்பெரிய போராட்டங்களையும், போர்களையும் உருவாக்கிக் கொண்டேயிருக்கும் சதிகாரர்கள், சூழ்ச்சிகாரர்கள், பெரும்பாலும், இந்துக்களுக்கிடையேதான் இருந்தார்கள், இருக்கிறார்கள்''

21) அதாவது, "இந்துக்களுக்கிடையில் சண்டை சச்சரவுகளும், போர்களும், போராட்டங்களும் நிகழ்ந்து கொண்டேயிருந்தால் தான்; தங்களுடைய கட்சிகளை வளர்க்க முடியும், தாங்களும் வளமாக வாழ முடியும், என்றெண்ணிச் செயல்படுகின்ற குறுகிய மனம் படைத்த சுயநல வெறியர்கள், கோணல் புத்திக்காரர்கள் இந்துக்களுக்கிடையேதான் மிகுதியாக இருந்தார்கள், இருக்கிறார்கள்".

22) இந்து மதத்தின் பெயரால் இருக்கக்கூடிய அரசியல் கட்சிகள், கழகங்கள், இயக்கங்கள் முதலியவைகளுக்கு இடையிலும் சரி; இந்து மதத்தின் பெயரால் இருக்கக்கூடிய சமய சங்கங்கள், மன்றங்கள், சபைகள், குழுக்கள் முதலியவைகளுக்கிடையிலும் சரி; இந்து மதத்தின் பெயராலுள்ள சமுதாய அவைகள், பேரவைகள், சபைகள், திருச்சபைகள், முதலியவைகளுக்கிடையிலும் சரி; என்றைக்குமே ஒற்றுமை ஏற்பட்டதில்லை, ஏற்பட்டதில்லை, ஏற்பட்டதில்லை, ஏற்பட்டதேயில்லை இதற்கு காரணமானவர்கள் இந்துக்களுக்கிடையேதான் இருந்தார்கள்; இருக்கிறார்கள்".

23) இன்னும் சொல்லப்போனால், 'இந்து மதத்தின் பெயரால் உள்ள அரசியல் நிறுவனங்களும், சமய நிறுவனங்களும், சமுதாய நிறுவனங்களும் அடிக்கடி ஒன்றோடு ஒன்று உறுமிக்கொண்டு, காரசாரமாக விமர்சனம் செய்துக்கொண்டு, யார் பெரியவர்? யார் சிறியவர்? என்று பலப்பரீட்சை பார்த்துக்கொண்டு, எல்லா வகையான வாய்ச் சண்டை, கைச்சண்டை, போட்டாபோட்டி மோதுதல்கள், போராட்ட மோதுதல்கள், வெறித் தாக்குதல்கள், .. முதலியவைகளை நிகழ்த்திக்கொண்டு தான் இருக்கின்றன, நிகழ்த்திக்கொண்டுதான் இருக்கின்றன, நிகழ்த்திக்கொண்டுதான் இருக்கின்றன. இதற்கு காரணமானவர்கள் இந்துக்களுக்கிடையேதான் இருந்தார்கள், இருக்கிறார்கள்".



11) இப்படிப்பட்ட சூழ்நிலையில்,

1. இன்றைய இந்துமதத் தலைவர்களால் இந்துக்களை ஒன்றுபடுத்த முடியுமா? ஒற்றுமைப்படுத்த முடியுமா?
2. இன்றைய இந்துமத கட்சிகளால் இந்துமத ஆட்சியை உருவாக்க முடியுமா?
3. இன்றைய இந்துமத தலைவர்கள் இந்துவேத வழியில் இந்துக்களாக வாழ்கிறார்களா?
4. இன்றைய இந்துமதத் தலைவர்களில் எத்தனை பேருக்கு இந்து வேதம் தெரியும்? இந்து மதம் புரியும்?
5. இன்றைய இந்துமத தலைவர்களில் அருளை அனுபவப் பொருளாக வழங்கும் வல்லமை பெற்றவர்கள் இருக்கிறார்களா?
6. இன்றைய இந்துமதத் தலைவர்களில் எத்தனை பேர், "இந்துக்களே !" - என்று மக்களை அழைக்கும் மனப்பக்குவத்தில் இருக்கிறார்கள்?
7. இன்றைய இந்துமதத் தலைவர்களில் எத்தனை பேர் இந்துக்களுக்குரிய பூசைவிதிகளையும், நெறிமுறைகளையும் கடைபிடிக்கிறார்கள்?
8. இன்றைய இந்து மத அரசியல் தலைவர்களுக்கிடையில் எத்தனை பேர் இந்து மதச்சின்னங்களை தாங்கி இந்துக்களாக தோன்றுகிறார்கள்?
9. இன்றைய இந்துமத கட்சிகளில் எத்தனை கட்சிகள், தாங்கள் இந்து மதத்திற்காக இருப்பதாக வெளிப்படையாக கூறுகின்றன?
10. இன்றைக்கு இந்து மதத்திற்கென வாழக்கூடிய உண்மை தலைவரைக் காட்ட முடியுமா?
11. இன்றைக்கு, இந்துமதத்திற்கென உண்மையாக உழைக்கக் கூடிய ஒரே ஒரு கட்சியையாவது காட்ட முடியுமா?
12. இன்றைக்கு, இந்துமதத்தின் பெயரால், பதவி, பணம், புகழ் செல்வாக்கு, அதிகாரம் முதலியவைகளை தேடி அலையாத கட்சியோ, தலைவனோ, இருப்பதாக கூறமுடியுமா?

13. இன்றைக்கு, இந்துமத வரலாற்றையும், கொள்கையையும் குறிக்கோளையும் விளக்கியுரைத்து கூறக்கூடிய கட்சியோ தலைவரோ இருப்பதாக கூறமுடியுமா?

14. இந்துமதத்தின் பெயராலுள்ள அரசியல் நிறுவனங்களாலோ அல்லது இந்துமதத்தின் பெயராலுள்ள சமய நிறுவனங்களாலோ அல்லது இந்துமதத்தின் பெயராலுள்ள சமுதாய நிறுவனங்களாலோ... அ) இந்துக்களுக்கிடையில் ஒற்றுமை உருவாகிடுமா? ஆ) சமாதான சகோதர வாழ்வு, உருவாகிடுமா? இ) அமைதியும், நிம்மதியும் நிறைந்த வாழ்வு கிடைத்திடுமா? ஈ) பாதுகாப்புக்குரிய பயிற்சிகளும், முயற்சிகளும் விளைவிக்கப்பட்டிடுமா?... - என்று வினாவெழுப்பி விடை தேடி; ஒவ்வொரு இந்துவும் சிந்தித்திடவேண்டும், சிந்தித்திடவேண்டும், சிந்தித்திடவேண்டும் சிந்தித்தே தீரவேண்டும்.

அப்பொழுதுதான், எல்லா இந்துக்களுமே இந்து மத வீழ்ச்சிக்கும், தாழ்ச்சிக்கும், எவையெவை காரணம்? அல்லது என்னென்ன காரணம்? அல்லது யார்-யார் காரணம்? என்ற பேருண்மைகளை ஓரளவாவது தெரிந்து புரிந்து தெளிவடைந்திடுவார்கள், தெரிந்து புரிந்து தெளிவடைந்திடுவார்கள், தெரிந்து புரிந்து தெளிவடைந்திடுவார்கள்...

12) அதனடிப்படையில் தான், அ) இந்துக்களை ஒன்று திரட்டவும், ஒற்றுமைப் படுத்தவும் முடியும்! ஆ) இந்துக்களை இந்துக்களாக வாழச் செய்யமுடியும்; இ) இந்துக்களை ஏமாற்றங்களிலிருந்தும். மதமாற்றங்களிலிருந்தும், அகற்ற முடியும்; தடுக்க முடியும்; ஈ) இந்துக் கோயில்களை காப்பாற்ற முடியும் இதன் மூலம் இந்து மதம் பிழைத்திடும்; இந்துக்களுக்கு வளமான வருங்காலம் உண்டாகிடும் இந்துக்களுடைய ஆட்சி உருவாகிவிடும்; இந்துமத அருட்பேரரசு அமைந்திடும்; இந்துக்களே இந்து மதத்தை கொலையும், தற்கொலையும் செய்வது, செய்து கொள்வது தடுக்கப்பட்டு அகற்றப்பட்டிடும்



13) இக் கருத்தோட்டத்தில் தான், இந்துவேத இந்துமத தலைமை ஆச்சாரிய குருபீடமான பதினெண் சித்தர் மடாதிபதியான அந்தணர் அண்ணல் ஞானாச்சாரியார் அவர்கள் இந்துவேதாகம பாடசாலைகளையும் மக்களுக்கு அருளை அநுபவப் பொருளாக வழங்கக்கூடிய யாகசாலைகளையும், இந்துமத இளைஞர் அமைப்புக்களையும் உருவாக்கி எவ்விதமான ஆரவாரமோ, ஆடம்பரமோ, இன்றி அமைதியாக இலைமறைகாயாக செயல்பட்டு வருகிறார். இவை பற்றி சிந்தித்திடு சிந்தித்திடு, சிந்தித்திடு; உன் சிந்தனையின் முடிவாக, உடனடியாக, பதினெண் சித்தர் மடத்து சித்தர்களையும், ஆச்சாரியார்களையும், ஆதீனங்களையும், தம்பிரான்களையும் வரவேற்றுச் செயல்பட்டிடு.

14) அப்பொழுதுதான், 'அந்தணர் அண்ணல் ஞானாச்சாரியார் மண்டைக்காடு பகவதியம்மன் திருவிழாவில் ஐந்தவா சேவா சங்கம் நடத்திய இந்து சமய மாநாட்டில் 11-3-95 சனிக்கிழமை மட்டும் உரையாற்றி விட்டு, 12-3--95 ஞாயிற்றுக்கிழமை மாலையில் அருளுரை ஆற்ற இயலாத நடைமுறை சிக்கல்கள் பல ஏற்பட்டுவிட்டன என்ற பேருண்மை உனக்கும் உன் போன்றோர்க்கும் ; புரிந்திடும்,

15) அன்பு மகனே! உனக்கு அவசர அவசியமாக எழுதிட்ட இந்த அஞ்சலை சிறு புத்தகமாக அச்சிடும் முயற்சியை மேற்கொண்டபொழுது; இந்த புத்தகத்திற்கு என்ன தலைப்பு கொடுப்பது என்று பதினெண் சித்தர் மடத்தை சேர்ந்தவர்கள் ஆய்வு செய்தார்கள் அதன் பயனாக,

1) இந்துக்களை ஒன்று திரட்ட முடியுமா?
ஒற்றுமைப் படுத்த முடியுமா?
2) இந்துக்களை இந்துக்களாக வாழச்செய்யமுடியுமா?
3) இந்துக்களின் மதமாற்றத்தை தடுக்க முடியுமா?
இந்துக்களின் ஏமாற்றங்களை அகற்ற முடியுமா?
4) இந்துக்களுக்கு பாதுகாப்பு கிடைத்திடுமா?
5) இந்துக்கோயில்களை காப்பாற்ற முடியுமா?
6) இந்துக்களுக்கு வருங்காலம் உண்டா?

7) இந்து மதம் பிழைத்திடுமா?

8) இந்துக்களுடைய ஆட்சி உருவாகிடுமா?

9) இந்துமத அருட்பேரரசை உருவாக்க முடியுமா? ...என்று பல தலைப்புக்கள் தேர்ந்தெடுக்கப்பட்டன. ஆனால், அன்பு மகனே! இச்சிறிய புத்தகத்தின் தலைப்பினால் யாரும் மனம் புண்பட்டு விடக்கூடாது என்று கருதி; பதினெண் சித்தர் மடத்துக் குருபீடம், இச்சிறிய புத்தகத்திற்கு

"இந்து மத தற்கொலை ஏன்?"

—என்று தலைப்பிட முடிவெடுத்திட்டது.

இந்நூல் வெளிவருவதற்குக் காரணமாக இருந்த அனைவருக்கும் குவலய குருபீடம் தமது வாழ்த்துதல்களையும், பாராட்டுதல்களையும் தெரிவித்துக்கொள்கிறது.

"ஓம் திருச்சிற்றம்பலம் ஓம்"





# இந்துக்களுக்கு ஒரு வேண்டுகோள்

## அருளுபவர்

இந்து வேத இந்துமத தலைமை ஆச்சாரிய குருபீடம்
ஞாலகுரு, அந்தணர் அண்ணல் ஞானாச்சாரியார்
பதினெண் சித்தர் மடாதிபதி, பீடாதிபதி

இந்துவேத நாயகம், இந்துமதத் தந்தை, அந்தணர் அண்ணல், ஞானாச்சாரியார் அவர்கள்; இருக்கு வேதத்திலும், சாம வேதத்திலும் (காண்டம்-8, மண்டலம்-32, நாள் வாசகம்-43 முதல் 48 முடிய) கூறியுள்ளவாறு "இந்துக்கள் வாழ்வதற்காக வழங்கும் "**ஓர் இந்துவின் ஆறு கடமைகள்**"

1. இந்துக்களாக இருப்பவர்கள், கட்டாயம், ஆண்டுக்கொருமுறை வருடப்பிறப்பு நாளன்று புதிய ஒற்றை உருத்திராக்கம் கழுத்தில் அணிந்து கொள்ள வேண்டும்.

வசதி வாய்ப்பிற்கேற்ப, பழைய ஒற்றை உருத்திராக்கத்தை கழற்றி குளத்திலோ, ஆற்றிலோ அல்லது கடலிலோ போட்டுவிட வேண்டும்.

2. இந்துக்களாக இருப்பவர்கள், கட்டாயம், மாதமொருமுறை அமாவாசை நாளிலோ அல்லது முழு நிலவு (பௌர்ணமி) நாளிலோ புதிய பூணூல் அணிந்து கொள்ள வேண்டும்.

வசதி வாய்ப்பிற்கேற்ப, பழைய பூணூலை கழற்றி, குளத்திலோ, ஆற்றிலோ அல்லது கடலிலோ போட்டுவிட வேண்டும்.

3. இந்துக்களாக இருப்பவர்கள், கட்டாயம், மாதமிருமுறை அமாவாசை நாளிலும், முழுநிலவு நாளிலும் புதிய "காப்பு கங்கணக்கயிறு" கட்டிக் கொள்ள வேண்டும். (ஆண்கள் வலது மணிக்கட்டிலும், பெண்கள் இடது மணிக்கட்டிலும்)

வசதி வாய்ப்பிற்கேற்ப, பழைய காப்புகங்கணக் கயிறை கழற்றி, குளத்திலோ, ஆற்றிலோ அல்லது கடலிலோ போட்டு விடவேண்டும்.

4. இந்துக்களாக இருப்பவர்கள், கட்டாயம், வாரமொரு முறையாவது அவரவர் வசதி வாய்ப்புக்களுக்கேற்ப ஏதாவது ஒரு கோயிலுக்கு சென்று அருட்சினை செய்து பூசை செய்து வரவேண்டும்.

5. இந்துக்களாக இருப்பவர்கள் அன்றாடம் காலை மாலை உடலை சுத்தம் செய்துக் கொண்டு, திருநீறு, குங்குமம், மஞ்சள், சந்தனம், சாந்து, திருமண்... முதலியவற்றில் தங்களுக்கு விருப்பமானதை அணிந்துக் கொள்ள வேண்டும்,

6. ஒவ்வொரு இந்துவின் குடும்பத்திலும், அக்குடும்பத்திலுள்ள யாராவது ஒருவர், அன்றாடம் மாலையில் பூசைக்குரிய இடத்தில் விளக்கேற்றி, காயந்திரி - மந்தரத்தை 48 முதல் 108 முறைகள் வரை ஓதவேண்டும்.

இந்த ஆறு கடமைகளை இந்துக்கள் தவறாது நிறைவேற்றுவதின் மூலம்தான்:-

1. இந்துக்கள், தங்களுடைய வாழ்க்கையில் ஏற்பட்டுள்ள அனைத்து வகையான பாதிப்புக்களையும் அகற்றிக்கொள்ள முடியும்.

2. இந்துக்கோயில்கள் அனைத்தையும், முழுமையாக, இந்துக்களுக்குப் பயன்படும்படி செய்திட முடியும்.

3. இந்துக்கள், மாற்றுமதக் கோயில்களுக்கும், மாற்றுமதத்தவர்களிடமும் சென்று மந்திரித்துக் கொள்வதையும், முடிகயிறு குளிசம், சக்கரம், பெற்றுக்கொள்வதையும் மாற்றமுடியும்.

இதைத்தான் பதினெண்சித்தர் மடம், தமது திருமடத்தைச் சேர்ந்த சித்தர்கள், சன்னிதானங்கள், ஆதீனங்கள், தம்பிரான்கள், மடாதிபதிகள், பீடாதிபதிகள் ... முதலிய நாற்பத்தெட்டு வகைப்பட்ட அருட்பட்டத்தவர்கள் மூலம் நாடெங்கும் செயலாக்கி வருகிறது.

எனவே, "இந்துக்களை, இந்துக்களாக மாற்றிட";
"இந்துக்களை, இந்துக்களாக வாழச் செய்திட";
"இந்துக்களை, இந்துவேத வாழ்வியல் வழிகளைப் புரிந்து கொள்ளும்படி செய்திட" –



இந்து மதத்தின் பெயராலுள்ள ஆர்.எஸ்.எஸ்., வி.எச்.பி. பி.ஜே.பி, சிவசேனா, இந்து முன்னணி... முதலிய கட்சிகளும் இந்து மதத்திற்காக உள்ள சேவா சங்கங்களும், கூட்டு வழிபாட்டு மன்றங்களும், பசனைக் குழுவினர்களும், அருள்நெறி திருக்கூட்டத்தார்களும், பதினெண் சித்தர் மடாடதிபதியின் அருட்பணி-திட்டங்களுக்கு ஆதரவு தர முன்வர வேண்டும். அப்பொழுதுதான் இந்துக்களின் உரிமைகளும், பெருமைகளும், கோயில்களும் பாது காக்கப்பட்டிட முடியும்.

மேற்குறித்த இந்துமதக் கட்சிகள், சங்கங்கள், ... முதலிய அமைப்புக்களில் உள்ளவர்கள், தங்கள் அமைப்புக்களில் இருந்து கொண்டே, தங்கள் தலைமையின் கீழ் செயல்பட்டுக் கொண்டே; பதினெண் சித்தர் மடாதிபதியின்,

**இந்து வேத வளர்ச்சிப் பணிக்கு,**
**இந்துக்களை இந்துக்களாக வாழச் செய்யும் பணிக்கு**
**இந்துக்களை ஒற்றுமைப் படுத்தும்! பணிக்கு** தொண்டாற்றலாம்!!! தொண்டாற்றலாம் !! தொண்டாற்றலாம் !!!

இதற்கு, தாராள மனதுடன் எவ்விதமான கட்சி வேறுபாடும் இன்றி, எல்லா இந்துக்களும் ஆர்வத்தோடு ஆதரவு தரவேண்டுகிறோம்.

பதினெண் சித்தர் மடம்
இந்துவேத முன்னேற்ற கழகம்,
வரதராசபுரம்,
அம்பத்தூர், சென்னை-53.
தொலைபேசி : 654447.

**இந்துவேதம் வளர்ப்போம் !**
**இந்துமதம் காப்போம் !!**
**அருளாட்சி அமைப்போம் !!!**

! ஓம் திருச்சிற்றம்பலம் ஓம் !

ஓம்

## வெளிவர இருக்கும் எமது மடத்தின் பிற வெளியீடுகள்

1) குடும்ப ஆண்டவர்களை பூசை செய்யும் நெறிமுறைகள்
2) பதினெண் சித்தர் ஞானக்கோவை
3) பதினெண் சித்தர் அக ஞானக்கோவை
4) பதினெண் சித்தர் புற ஞானக் கோவை
5) பதினெண் சித்தர் விஞ்ஞானக் கோவை
6) பதினெண் சித்தர் மெய்ஞ்ஞானக் கோவை
7) பகுத்தறிவுப் பூர்வமான இந்து வேதம்
8) இந்து மதம் இங்கே! இந்து வேதம் எங்கே?
9) இந்து வேதத்தை தெரிந்து கொள்ளுங்கள்! இந்து மதத்தை புரிந்து கொள்ளுங்கள்! (பதினெண் சித்தர் பீடாபதி அவர்களின் கேள்வி-பதில்)
10) பதினெண் சித்தர்களின் சிறுவர்களுக்கான நீதிக்கதைகள்
11) இல்லற மேற்போர்க்கு பதினெண் சித்தர்கள் கூறும் அறவுரை, அறிவுரை, அருளுரை
12) இந்து வேத இந்து மதத்தின் முதல் யுகத்து வரலாறு
13) வாழ்வியல் நடைமுறையில் இந்து வேதம்
14) தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய கருவூரூரின் வரலாறு
15) ஆன்மீகமா? நாத்திகமா?
16) பதினெண் சித்தர்களின் கைரேகை சாத்திரம்
17) பதினெண் சித்தர்களின் பெயர்ராசி சாத்திரம்
18) பதினெண் சித்தர்களின் தொடுகுறி சாத்திரம்
19) பதினெண் சித்தர்களின் அங்கவியல் சாத்திரம்
20) பதினெண் சித்தர்களின் மனையடி சாத்திரம்
21) பதினெண் சித்தர் வரலாறு